# 1956 இல் நடந்த திருமலை விவசாயிகளின் படுகொலையே இனவாதத்தின் தொடக்கப் புள்ளி – சுட்டிக்காட்டிய சிறீதரன்

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினம் தமிழரின் கரி நாள் எனப் பிரகடனப்படுத்தி, வடகிழக்கு பல்க லைக்-கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொண்டமைக்காக தமிழ்தேசியன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் வேலன் சுவாமி கள் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலி ஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் விசாரணை இன்றைய தினம் மூன்றாவது தவணையாக யாழ்ப்பாண நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இன்றைய வழக்கு விசாரணையின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீ தரன் மட்டுமே நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

வழக்குடன் தொடர்புடைய ஏனையவர்களான மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன், யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வடமாகாணசபையினதும் நாடாளுமன்றத்தினதும் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், யாழ். மாநகரசபையின் முன்னாள் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், வேலன் சுவாமிகள் ஆகியோர் முன்னி யாகியிருக்கவில்லை.

இவ்வாறான நிலையில், ஏனையவர்கள் முன்னிலையாகாதமை தொடர்பில் நீதிபதி கேள்வியெழுப்பியதோடு, குறித்த வழக்கை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளார்.

வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் மக்களின் உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் மக்கள் பிரதிநிதிகளாகக் குரல்கொடுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்படுவதும், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதும் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகள், நீதிமன்றத்தின் ஊடாக அச்சுறுத்தல் விடுப்பதாகவே பார்க்க முடிகின்றது, எனவும் அவர் குறிப்பிட்டார்.

1919 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரை தமிழர்கள் இன மத பேதமின்றி சிங்களவர்களுடனும் இணைந்து தமது செயற்பாடுகளை முன்னெடுத்தார்கள். ஆனால், குறிப்பிட்ட காலப்பகுதியில் சிங்கள அரசுகளால் தமிழருக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள் முனைப்பு பெற்றதால்தான் தந்தை செல்வா மற்றும் ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆகியோர் சுயநிர்ணயம் தொடர்பான கோரிக்கையை முன்வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக 1948 ஆம் ஆண்டு தந்தை செல்வா, தமிழருக்குரிய சுயநிர்ணயம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமன்றி,



1956 ஆம் ஆண்டு திருகோணமலை கந்தளாயில் 156 விசாயிகள் இலங்கைப் பொலிஸார் முன்னிலையிலேயே சிங்கள வன்முறையாளர்களால் கொன்று குவிக்கப்பட்டிருந்தனர். இதுவே, இலங்கையில் இடம்பெற்ற முதலாவது இனப்படுகொலையின் தொடக்கம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சுட்டிக்காட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில், நேற்றைய தினம் அடிமட்டச் சிங்கள மக்களின் உணர்வுகளை தூண்டும் வகையிலும், சிங்கள இனவாதத்தை காண்பிக்கும் வகையிலும் உதய கம்மன்பில குருந்தூர் மலைப் பகுதிக்கு பௌத்த கொடியுடன் சென்றுள்ளார். அவரின் இந்தச் செயற்பாடானது, பெரும்பான்மையினர் மத்தியில் இனவாதத்தைத் தூண்டும் வகையிலேயே அமைந்துள்ளது.

இலங்கையின் சுதந்திர தினம் தமிழரின் கரி நாள் என பிரகடனப்படுத்தி வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 09 | வெள்ளிக்கிழமை 23.06.2023 | கதிர் 10




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV

காலைக்கதிர் TV YouTube தளம்


## ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்தை சரியான பாதையில் கொண்டுவாருங்கள்!

### திஸ்ஸவிடம் ஹிருணிகா கோரிக்கை



ஐக்கிய மக்கள் சக்தியின் உயர்மட்டத் தலைமைகள், இருமுகங்கள் கொண்ட ஏமாற்றுக்காரர்களைத் தான் நம்புவதாக அக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர குற்றம் சுமத்தியுள்ளார்.

கட்சியில் இருக்கும் சிலர் பாம்பு போன்றவர்கள் எனவும், கட்சியுடன் உறுதியாயிருக்கும் தம்மைக் கட்சித் தலைவர் நம்புவதில்லை, எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய நிலை குறித்த தனது விரக்தியை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்துடன் பகல் முழுவதும் கதைத்துப் பேசிவிட்டு, இரவில் ஜனாதிபதி ரணிலுடன் சேர்ந்து பொழுதுபோக்கும் சிலரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கின்றனர், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தயவுசெய்து சஜித் பிரேமதாசவிடம் பேசி அவரைச் சரியான பாதையில் கொண்டு செல்ல முயற்சி செய்யுங்கள் என கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் ஹிருணிக்கா கோரிக்கை விடுத்துள்ளார்.

ரணிலைச் சந்திப்பவர்கள், தங்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் பதவியில் இருந்து மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டாலும் ஜனாதிபதியுடன் இணைவார்கள்.

ரணில் என்னை அழைத்தால் நான் சில விஷயங்களைச் சொல்வேன் என அவருக்கு நன்றாகத் தெரியும் என்பதால் ஜனாதிபதி என்னிடம் ஒருபோதும் பேசுவதில்லை, எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆரம்பத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார போன்றோர் கட்சி தாவியபோது, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருந்தால், இப்போது யாருக்கும் ஜனாதிபதியுடன் இணையும் தைரியம் வந்திருக்காது எனவும் ஹிருணிக்கா தெரிவித்தார்.

## ஜுன் 30 ஆம் திகதியன்று விசேட வங்கி விடுமுறை

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள ஹஜ் பெருநாளை முன்னிட்டு மறுநாளான ஜூன் 30 ஆம் திகதியும் சிறப்பு வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை துல் ஹஜ் மாத தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசல் மஹ்ரிப் தொழுகையின் பின்னர் நடைபெற்றது. இதன்போது நாட்டின் சில பகுதிகளில் தலைப்பிறை தென்பட்டதாக கொழும்புப் பெரிய பள்ளிவாசல் அறிவித்தது. இதையடுத்து, ஹஜ் பெருநாளைக் கொண்டாட இஸ்லாமியர்கள் தயாராகிவருகின்றனர்.

## அதிகரித்த வரி அறவீட்டுக்கு எதிராக கிளிநொச்சியில் பொதுச் சந்தை வர்த்தகர்கள் கடைகளை மூடி எதிர்ப்பு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் பொதுச் சந்தை வர்த்தகங்கள் இன்று சந்தை வளாகத்தில் உள்ள அனைத்து வியாபார நிலையங்களையும் மூடி எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுப்பட்டனர்.

மே மாதம் தொடக்கம் தங்களிடம் அதிகரித்த வரி அறவீடு மேற்கொள்வதற்கு எதிராக இந்த எதிர்ப்பு போராட்டம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் 1500 ரூபா ஒவ்வொரு வியாபாரியிடமும் மாதாந்தம் பெறப்பட்டு வந்த நிலையில் மே மாதம் தொடக்கம் 7500 ரூபா வரியாகவும் 600 ரூபா கழிவகற்றலுக்கும் என 8100 ரூபா அறவிடுவதற்கு கரைச்சி பிரதேச சபை தீர்மானித்துள்ளதாகவும், அது தமக்கு கடும் சுமையாகியுள்ளதாகவும் தெரிவித்து சந்தை வியாபாரிகள் தங்களது வியாபார நிலையங்ளை மூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆயினும், 2021 ஆம் ஆண்டு கரைச்சிப் பிரதேச சபையால் விலை மதிப்பீட்டுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டு, அதற்கமைவாக விலை மதிப்பீடு செய்யப்பட்டே வரி அறவிடப்படுவதாக கரைச்சிப் பிரதேச சபையின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். இது சட்ட ரீதியானது எனவும் இதனை

மேற்கொள்ளாதுவிடின் கணக்காய்வு விசாரணைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலை உருவாகும், எனவும் அவர் தெரிவித்தார்.



பேராட்டத்தில் ஈடுபட்ட சந்தை வர்த்தகர்கள் சார்பாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரைச் சந்தித்து தங்களிது கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# புலிகளின் ஆதரவாளருக்கு டெலிகொம் விற்பனை நாடாளுமன்றில் சரத் பொன்சேகா குற்றச்சாட்டு!

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்குக் கடந்த காலங்களில் பணப்பரிமாற்றம் செய்த இங்கிலாந்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தை விற்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகாவால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஊழல் ஒழிப்புச் சட்ட மூலம் தொடர்பிலான நாடாளு மன்ற விவாதத்தின்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன் சேகா இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

தங்கத் திருடனை எப்படிப் பாதுகாத்து இந்தச் சபைக்கு அழைத்து வந்தார்கள் என்பதைப் பார்த்தோம். எனவே இன்று சட்டத்தைப் பற்றிப் பேசிப் பயனில்லை. சட்ட மூலங்களைக் கொண்டுவருவதன் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது, எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

மக்கள் உணவுக்கு வழியின்றித் தவித்து வருவதோடு, இக்கட்டான சூழ்நிலையைப் புரிந்து கொண்டு வாழு மாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த நிலை யில், பல்வேறு சட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்து



மக்களை அடக்க முயற்சிக்கிறது. அதனைக் கொண்டு ஊடகங்களைப் பழிவாங்கவும் முயற்சிக்கின்றனர்.

இந்த நாட்டில் நீதித்துறை மிகவும் ஊழல் நிறைந்தது. தற்போது, ஊழல் தடுப்பு மனுவைக் கொண்டு வர முயற்சிக்கின்றனர். இவர்கள் ஒரு ஹிட்லரைப் போலவே வாழ முயற்சிக்கின்றனர்!, எனவும் நாடாளு மன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கடுமையாகச் சாடியுள்ளார்.



# புலம்பெயர் இலங்கையருக்கு கனடாவில் அடித்த அதிர்ஷ்டம்

கனடா வாழ் இலங்கையர் ஒருவர் அதிர்ஷ்ட இலா பச் சீட்டு மூலம் சுமார் 35 மில்லியன் கனேடிய டொலர் களை வென்றெடுத்துள்ளார்.

கனடாவின் ஒன்றாரியோ வின்ட்ஸோர் பகுதியில் வசிக்கும் யசிங்க என்பவரே இவ்வாறு வெற்றிபெற்ற வராவார். இது இலங்கை சுமார் 8 பில்லியன் 181 மில் லியன் 6 இலட்சத்து ஐம்பதாயிரம் (8,181,650,00) ரூபாவாகும்.

கனடாவிற்கு புலம்பெயர்ந்ததன் பின்னர் அவர், அவ்வப்போது லொத்தர் சீட்டுகளைக் கொள்வனவு செய்ததோடு, ஜாக்பொட் பரிசுத் தொகை அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் தவறவிடாது லொத்-தர் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் மூலம் கிடைத்த பணத்தை, மகளின் கல்விக்காகவும், கார் வாங்கு வதற்கும், பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்யவும், அறக் கட்டளைகளுக்கு வழங்கவும், இலங்கையி லுள்ள உறவினர்களைச் சந்திக்கவும் பயன்படுத்தப் போவதாக ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு வைத்தியசாலைக்கூரை உடைந்தது தெய்வாதீனமாக உயிர் தப்பிய நோயாளர்கள்

மட்டக்களப்பு கரடியனாறு வைத் தியசாலையில் நேற்றைய தினம் அவசர சிகிச்சைப் பிரிவு அறையின் கூரை உடைந்து வீழ்ந்துள்ளது. சிகிச்சை பெற்றுவந்த 3 பேர் இந்த விபத்திலிருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

வைத்தியசாலையின் கூரை மேலாகக் குரங்கு பாய்ந்தமையா லேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ள தாக வைத்தியசாலை வட்டாரத்தி னர் தெரிவித்துள்ளனர். உடைந்து விழுந்த கூரை அண்மையிலேயே புதிதாக அமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.



புதிதாக அமைத்த வைத்திய சாலையின் கூரை, குரங்கு பாய்ந்து உடைந்து விழும் அளவுக்குத் தர மில்லாத வகையில் நிர்மாணிக் கப்பட்டுள்ளது, என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதே வேளை, இது தொடர்பில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உடனடியாகக் கவ னம் எடுக்க வேண்டும், எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் இது போல் தரமின்றி நிர்மாணிக்கப் பட்டுள்ள வைத்தியசாலைகளை ஆராய்ந்து அவற்றைத் திருத்துவ-தற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுக்கவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



# மலையகம் 200 - புகைப்பட கண்காட்சி யாழ்ப்பாணத்தில்

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் கண்காட்சியொன்று இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

மலையக மக்களின் வாழ்வியல் சவால்களை வெளிப்படுத்தும் மலையக மக்களின் கலை வெளி-ப்பாடுகளாக "புறக்கணிக்கப்பட்ட மலைகள்" என்ற தலைப்பில் கிசோகுமாரின் புகைப்படக் கண்காட்சியும், "தேயிலைச் சாயம்", எனும் தலைப்பில் மாற்றுக் கொ-ள்கைகளுக்கான நிலையத்தின் புகைப்படங்களின் கண்காட்சியும் இன்று தொடக்கம் ஜு/ன் 25 வரை, யாழ்ப்பாணத்தில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை இடம்பெ-றுகின்றன.

யாழ்ப்பாணம் 286, பிரதான வீதியில் அமைந்-துள்ள கலைத்தூது கலையகத்தில் ஜு/ன் 25 பிற்பகல் 3 மணிக்கு டிக்கோயா நுண்கலைக் கல்லூரி வழங்கும் நாட்டியநாடகமும், பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளன.

# நெற்செய்கையைத் தாக்கும் பன்றி நெல் தெளிவூட்டும் நிகழ்வு அளவெட்டியில்

நெற்செய்கையில் தாக்கத்தை விளைவிக்கும் பன்றி நெல் எனும் களையின் தாக்கம் தொடர்பாக விவசாயிகளுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் ஒன்று அளவெட்டி பினாக்கையில் நேற்று நடைபெற்றது

தெளிவூட்டும் நிகழ்வில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறிரங்கன் மற்றும் விவசா யப் போதனா ஆசிரியர்கள், அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த நெற் செய்கையாளர்கள் போன்றோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது நெற் செய்கையாளர்களுக்கு பன்றி



நெல் களையினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக பினாக்கை வயல் வெளிப்பகுதியில் விளக்க உரைகள் வழங்கப்பட்டன.

# கிளிநொச்சி கல்மடுநகரில் காட்டு யானைகள் அட்டகாசம் பயன் தருகின்ற தென்னைப் பயிர்களை அழித்து நாசம்

கிளிநொச்சி கண்டாவளப் பிரதேச செயலாளர் பிரி வுக்கு உற்ப்பட்ட கல்மடுநகர் பகுதியில் தொடர்ச்சியாகக் காட்டு யானைகளினால் பல்வேறு வகையிலும் பாதிக் கப்பட்டுள்ளதாக அப்பகுதியில் வாழும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது ஒரு வார காலமாக தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்புகள் பகுதியில் மாலை 6 மணியளவிலிருந்து அதிகாலை வரை காட்டு யானைகளின் அட்டகாசத்தி னால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் இதன் காரணமாக மாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் செல்வதற்கு அச்ச நிலை தோற்றியுள்ளதாகவும், நாளாந்தக் கடமை களை முன்னெடுக்க முடியாது ஆறு மணிக்குப் பின்னர் வீடுகளிலேயே முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

நேற்றைய தினமும் கல்மடு நகர் பத்தேக்கர் பகுதியில் இரண்டு காட்டு வாழ்வாதாரமாக வைக்கப்பட்டிருந்த 45 க்கு மேற்பட்ட 10 வருடம் கடந்த நிலையில் பயன் தரக்கூடியதாக உள்ள தென்னைகளை யானைகள் முற்று முழுதாக அளித்துள்ளதாகவும், இப்பகுதியில் இவ்வருடம் மூன்றாவது தடவையாகவும் இவ்வாறு தென்னைகளை அவை அளித்துள்ளதாகவும் கூறுகின் றனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் அரசியல் வாதிகள் தாம் வாசிக்கும் பகுதிக்கு வருகை தந்து, கல்மடு தொடக்கம் இரணைமடுப் பகுதிவரை மின்சார வேலி அமைக்கும் பணி விரைவாக முன்னெடுக்கப்பட இருப்பதாகத் தெரிவித்து சென்றதாகவும், ஆயினும், அதன்பின் இன்று வரையில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில் இருப்பதாகவும் இதன் காரணமாக தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலை தொடருமாயின் தென்னைச் செய்



கையையும் கைவிட்டு, இப்பகுதியில் இருந்து வேறு பகுதிக்கு மக்களும் செல்ல வேண்டிய நிலை தோன்றி யுள்ளதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகா ரிகள் உரிய தீர்வினைப் பெற்று தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதாகவும் இப்பகுதியில் வாழும் மக்கள் கவலையுடன் கூறியுள்ளனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட - maalaikkathir@gmail.com



# மலையகத்தில் சரக்கு ரயில் தடம் புரண்டது

கண்டியில் இருந்து பதுளை நோக்கி பயணித்த சரக்கு ரயில் தலவாக்கலை மற்றும் வடகொட புகையிரத நிலையங்களுக்கு இடையில் தடம் புரண்டது.

குறித்த சம்பவம் இன்று காலை 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதனால், மலையகப் பாதையினூடான ரயில் சேவைகள் தாமதமாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, தற்காலிக நடவடிக்கையாக, குறித்த ரயில் நிலையங்களுக்கு பேருந்துச் சேவை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே ரயில் பாதையை புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் விழித்திரை சத்திர சிகிச்சைகள் ஆரம்பம்







யாழ்.போதனா வைத்தியசாலையில் விழித்திரை சத்திர சிகிச்சைகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

விழித்திரை சத்திர சிகிச்சை ஆனது சத்திர சிகிச்சை நிபுணர் இல்லாத காரணத்தினாலும் சத்திர சிகிச்சைக்கு தேவையான பொருட்கள் இல்லாத காரணத்தினாலும் கடந்த 2 வருடங்களாக நடைபெறவில்லை.

இந்நிலையில் தற்பொழுது விழித்திரை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஷைலா பரதன் பதில் கடமையேற்றுள்ளார்.

அவர் தமது சேவையினை மக்களுக்கு வழங்கு முகமாக வாரத்துக்கு ஒருமுறை ஆறு பேர் வீதம் 100 சத்திர சிகிச்சைகளை இன்று முதல் மேற்கொள்ள உள்ளார்.

# சமுர்த்தி வங்கியில் மானியம் பெறச் சென்ற வயோதிபப் பெண் விபத்தில் பரிதாபச் சாவு!

வீதி விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று இங்கிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமுர்த்தி வங்கியில் மானியத்தைப் பெற்றுக்கொள்வதற்காகச் சென்ற 68 வயதான வயோதிபப் பெண்ணே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹந்தபாங்கொட சமுர்த்தி வங்கிக்கு முன்பாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியமையால் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் ஹொரணை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிசிச்சை பலனின்றி அவர் உயரிழந்துள்ளார்.

19 வயதான இளைஞர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளே விபத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த இளைஞரும் ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞருக்குச் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை எனவும், அவர் தனது தந்தைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது எனவும் இங்கிரிய பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸாரின் திருட்டு அம்பலம்!

ஹட்டன் வலய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தில் இரவு நேரத்தில் கடமையில் உள்ள பொலிசார், நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக போடப்பட்டுள்ள பெறுமதி மிக்க மின் குமிழ்களை திருடிச் சென்ற காட்சி வர்த்தக நிலையங்கள் முன்பாக பொருத்தப் பட்டிருந்த பாதுகாப்பு கமராக்களில் பதிவாகி உள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட ஹட்டன் வலயத்திற்கு பொறுப்பான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டதுடன், இனிவரும் காலங்களில் இவ்வாறான செயல்கள் இடம்பெற இடமளிக்க வேண்டாம், எனவும் நகரத்தின் வர்த்தக பிரமுகர்கள் பொலிஸாரிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# அத்தியாவசிய மருந்துகளின் இறக்குமதி நிதி அமைச்சு பூரண ஆதரவை வழங்கும்

அத்தியாவசிய மருந்துகளைத் தடையின்றி இறக்குமதி செய்வதற்கு நிதி அமைச்சு பூரண ஆதரவை வழங்கும், என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட அதிகாரிகளுடன், நிதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அத்துடன், சுகாதார அமைச்சின் செலவுகளை ஈடுசெய்வது தொடர்பான, விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகவும் பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டிருக்கும் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டைச் சரி செய்ய நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும், முறையான தீர்வு கிடைக்காவிட்டால் பதவி விலகப் போவதாகவும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றைய தினம் அறிவித்திருந்தார்.

நிதி தொடர்பாகவும் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது எனவும், சுகாதாரத் துறைக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே அத்தியாவசிய மருந்துகளைத் தடையின்றி இறக்குமதி செய்வதற்கு நிதி அமைச்சு ஆதரவு வழங்கும் என பதில் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் திருகோணமலை மற்றும் வவுனியாவில் பல்வேறு உதவித்திட்டங்கள்






யாழ்ப்பாணம் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் திருகோணமலை மற்றும் வவுனியாவில் பல்வேறு உதவித்திட்டங்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை செல்வநாயகபுரம் பிரதேச வைத்தியசாலையில் மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக 505,400 ரூபா பெறுமதியான மருந்து வகைகள் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் சத்தியசீலனிடம் சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள் அவர்கள் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

இதேவேளை வவனியா கல்லாறு - ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கு 440,520 ரூபா நிதிப்பங்களிப்பில் குழாய்க்கிணறு அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

இவ் உதவித் திட்ட நிகழ்வில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சிவில்சமூக செயற்பாட்டாளர் இ.தயாபரன் மற்றும் ஆச்சிரம தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

# கதிர்காமத்துக்குப் பாத யாத்திரை சென்ற குடும்பஸ்தர் பாம்பு தீண்டியதால் மரணம்

அம்பாறை, பொத்துவில் உகந்த முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்குப் பாத யாத்திரை சென்ற ஒருவர் பாம்பு தீண்டியதில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பிலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய லிங்கசாமி கேதீஸ்வரன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், உகந்த முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்குப் பாத யாத்திரை சென்று கொண்டிருந்த வேளையில் குமுக்கன் வனப்பூங்கா பகுதியில் பாம்புத் தீண்டலுக்கு உள்ளாகியுள்ளார்.

அந்தப் பகுதியில் பாத யாத்திரிகர்களுக்காக நடமாடும் வைத்திய சேவையில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் அம்புலன்ஸில் திருக்கோவில் வைத்தியசாலைக்கு அவரை அழைத்துச் சென்றுள்ளனர். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் கதிர்காமத்துக்குப் பாத யாத்திரையில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தமையும் நினைவுபடுத்தத்தக்கது.

# மெரினாவில் கருணாநிதிக்கு பேனா நினைவுச் சின்னம் 15 நிபந்தனைகளோடு கடலோர ஆணையம் அனுமதி

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான கருணாநிதியின் நினைவிடம் மெரினாவில் அண்ணா சமாதியின் அருகே அமைந்துள்ளது.

அவரது இலக்கியப் பணிகளைப் போற்றும் வகையில் சென்னை மெரினா கடல் பகுதியில் 81 கோடி ரூபா செலவில் 134 அடி உயரத்தில் பிரமாண்ட பேனா நினைவுச்சின்னம் ஒன்றை அமைக்க தமிழக அரசு முடிவு செய்தது. இந்த நினைவுச் சின்னத்தை 3 பகுதிகளாகக் கட்டவும் திட்டமிடப்பட்டது.

முதலில், கருணாநிதியின் நினைவிடத்தில் இருந்து கடற்கரை வரை 220 மீற்றர் நீளம், 6 மீற்றர் உயரத்தில் கொங்கிரீட் பாலம் ஒன்று கட்டவும், கொங்கிரீட் பாலம் முடிவடையும் மணல் பரப்பில் இருந்து கடலுக்குள் சில மீற்றர் நீளத்தில் இரும்புப் பாலம் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பேனா நினைவுச் சின்னம் 30 மீற்றர் உயரமும், 3 மீற்றர் விட்டமும் கொண்டதாக எட்டாயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் அமைக்கப்படுகிறது. நினைவுச் சின்னத்தை அணுகும் பாலம், 9 மீற்றர் அகலமும், கடல் பரப்பு மற்றும் மணல் பரப்பில் இருந்து 6 மீற்றர் உயரமும் கொண்டதாகக் கட்டப்படவுள்ளது.

பேனா நினைவு சின்னத்தை அமைக்க இந்திய மத்திய அரசின் சுற்றுச்சூழல் நிபுணர் மதிப்பீட்டுக் குழு ஏற்கனவே ஒப்புதல் வழங்கிய நிலையில், மத்திய அரசின் கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி கோரி தமிழக அரசு விண்ணப்பித்தது. இந்த விண்ணப்பத்தைப் பரிசீலித்த கடலோர ஒழுங்குமுறை ஆணையம், மெரினா கடல் பகுதியில் பேனா நினைவு சின்னத்தை அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

ஐ.என்.எஸ் அடையாறு கடற்படைத் தளத்தில் தடையில்லாச் சான்று பெற வேண்டும். கட்டுமானப் பணிகளுக்காக எந்தவொரு நிலையிலும் கடற்கரைப் பகுதியில் இருந்து நிலத்தடி நீரை எடுத்துப் பயன்படுத்தக்கூடாது. திட்டத்தைச் செயல்படுத்தும்போது நிபுணர் குழு அமைத்துக் கண்காணிக்க வேண்டும். அவசரகால மீட்புப்பணி தொடர்பான விரிவான திட்டம் தீட்டப்பட வேண்டும். ஆமை



இனப்பெருக்கக் காலத்தில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளக்கூடாது, என்பன உள்ளிட்ட 15 நிபந்தனைகள் கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தி னால் விதிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் நடைமுறைகள் தொடர்பாக தவறான தகவல் அளிக்கப்பட்டால் அனுமதி வாபஸ் பெறப்படும் என்றும் அந்த ஒப்புதல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்திருப்பதால் விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நடிகர்கள் அரசியலுக்கு வருவதென்பது தமிழகத்தின் சாபக்கேடு: திருமாவளவன்

இந்திய சினிமாவில் பெரிய ஆளாக இருப்பவர்கள் பிரபலமாகி முடிந்தவுடன் அரசியலுக்குள் நுழைவது சாபக்கேடு!, என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

பொது வாழ்க்கைக்கு வருபவர்கள் எந்தப் பதவிக்கும் வரலாம். அதில் தவறு ஏதும் கிடையாது. முதலில் மக்களுக்காக வேலை செய்ய வேண்டும். மக்களுக்காகத் தொண்டாற்றிய பின்னர் ஆட்சி பற்றிய கனவு வரலாம், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சினிமாவில் இருக்கும் பிரபலத்தை வைத்துக் கொண்டு முதலமைச்சராகி விடலாம் என்ற எண்ணம் தற்போது நிலவுகிறது, எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இது தமிழ்நாட்டின் சாபக்கேடு, இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் நடிகராக, இயக்குனராக அவர்கள் வேலையை மட்டுமே செய்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் தான் அரசியலுக்கு வந்து விடுகின்றனர்.

அந்த மாதிரியான எண்ணங்கள் இல்லாமல், தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு நடிகர் விஜய் வந்தால் வரவேற்பேன். முற்போக்கான சிந்தனையுடன் களமிறங்க வேண்டும். தமிழ்நாட்டிற்குத் தேவையான ஒன்றாக இருக்கிறது சினிமா. ஆனால், அதே பிரபலத்தைப் பயன்படுத்தி அரசியலில் நுழைவது வேதனை, எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மும்பைத் தாக்குதல் தீவிரவாதி சஜித் மிர்ரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கும் திட்டம்

### சீனா முட்டுக்கட்டை போடுவதற்கு எதிர்ப்பு

கடந்த 2008 நவம்பர் 26 ஆம் திகதி மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தியிருந்தனர். இதில் 175 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலின்போது, பாகிஸ்தானில் இருந்து, மும்பையில் உள்ள தீவிரவாதிகளுக்கு உத்தரவு பிறப்பித்த நபர் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த சஜித் மிர் என அடையாளம் காணப்பட்டிருந்தார். இதற்கான ஒலிப்பதிவு ஆதாரங்கள் இந்தியாவிடம் உள்ளன.

இதனால், அந்த நபரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கும் திட்டத்தை ஐ.நா.வில் அமெரிக்கா கொண்டு வந்தது. இதற்கு இந்தியாவும் ஆதரவு தெரிவித்தது. ஆனால், இந்தத் திட்டத்துக்கு சீனா முட்டுக்கட்டை போட்டுள்ளது.

மும்பை தாக்குதலின்போது மும்பை தாஜ் ஹோட்டலில் இருந்த வெளிநாட்டினரை கொல்ல சஜித் மிர் உத்தரவிட்ட ஒலிப் பதிவை, ஐ.நா கூட்டத்தில் இந்திய வெளியுறவுத்துறை இணைச் செயலாளர் பிரகாஷ் குப்தா ஒலிக்கச் செய்தார்.

அதன்பின் அவர் உரையாற்றியபோது, தீவிர



வாதி சாஜித் மிர்க்குசர்வதேசத் தடை விதிப்பதற்கு வலுவான காரணங்கள் இந்தியாவிடம் உள்ளன. மும்பைத் தாக்குதல் நடந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும், அதற்கு காரணமானவர்களை நீதிக்கு முன் கொண்டுவர முடியவில்லை. இதற்குக் காரணமான இரட்டை நிலைப்பாடு (சீனா) தவிர்க்கப்பட வேண்டும். தீவிரவாதச் செயலை எந்த விதத்திலும் யாரும் நியாயப்படுத்தக்கூடாது, என்று வலியுறுத்தியிருக்கிறார்.

## இந்தியாவும், அமெரிக்காவும் இணைவது உலகத்தின் வளர்ச்சிக்கு உதவும் : மோடி



அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மோடி, வொஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மனைவி ஜில் பைடன் ஏற்பாட்டில் என்.எஸ்.எப். என்னும் தேசிய அறிவியல் அறக்கட்டளையின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளார்.

அப்போது அவர், கல்வித்துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கு 5 அம்சத் திட்டங்களை அறிவித்துள்ளார்.

இந்தியா, பல்வேறு திட்டங்களில் தேசிய அறிவியல் அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படுகிறது. இந்த நிகழ்ச்சிக்கு திட்டமிட்டு ஏற்பாடு செய்ததற்காக ஜில் பைடனுக்கு நன்றி. வளர்ச்சியின் வேகத்தைத் தக்க வைப்பதற்கு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள திறமைகளின் ஒத்துழைப்பை உறுதி செய்வது முக்கியமாகும்.

இந்தியா இளைஞர்களின் பட்டாளத்தைக் கொண்டுள்ளது. இந்தியாவும் அமெரிக்காவும் இணைவது உலகத்தின் வளர்ச்சிக்கு உதவும், என்று தெரிவித்துள்ளார்.

## பதிவுத் திருமணங்களில் மணமக்களின் மத விவரங்களைக் கேட்கக்கூடாது!

### பதிவாளர்களுக்கு கேரள அரசு உத்தரவு

கடந்த ஆண்டு கொச்சியில் பதிவுத் திருமணம் செய்யச் சென்ற பி.ஆர். லாலன், ஆயிஷா ஆகியோரின் மதம் தொடர்பான விவரங்களை கொச்சி மாநகராட்சிச் செயலர் கேட்டுள்ளார். மதங்களைக் கூற அவர்கள் மறுக்கவே திருமணத்தைப் பதிவு செய்ய முடியாது, என்று அவர் மறுத்துவிட்டார்.

இதை எதிர்த்து லாலன்-ஆயிஷா தம்பதியினர் கடந்த ஆண்டு கேரள உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். மனுவை விசாரித்த நீதிமன்றம், மத விவரங்களைக் கேட்காமல் அவர்களது திருமணத்தைப் பதிவு செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதையடுத்து, கேரள அரசின் கூடுதல் தலைமைச் செயலர் பிறப்பித்துள்ள உத்தரவில், திருமணத்தை முறையாகப் பதிவுசெய்ய பதிவாளர் அலுவலகங்களுக்கு வரும் மணமக்களிடம் மத விவரங்களைப் பதிவாளர்கள் கேட்கக்கூடாது. மத விவரங்களைக் கூற மறுப்பதால் திருமணத்தைப் பதிவு செய்ய முடியாது, என்று பதிவாளர்கள் மறுக்கக்கூடாது.

அதேபோல் மணமக்களின் பெற்றோரின் மத விவரங்களையும் கேட்கக் கூடாது. மணமக்களின் அடையாள அட்டை, வயது தகுதி போன்ற விவரங்களைப் பரிசோதித்த பின்னர், அவர்களது திருமணத்தைப் பதிவாளர்கள் பதிவு செய்யலாம். இந்த உத்தரவை அனைத்து பதிவாளர்களும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

அதேபோல், திருமணத்தைப் பதிவு செய்யும் அதிகாரத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள், பொதுப் பதிவாளர், தலைமைப் பொதுப் பதிவாளர்களும் இதைப் பின்பற்ற வேண்டும். இந்த உத்தரவைப் பின்பற்ற மறுக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும், என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

# டைட்டன் நீர்மூழ்கி வெடித்துச் சிதறியமை கண்டுபிடிப்பு டைட்டானிக் கப்பலைப் பார்வையிடச் சென்ற ஐவரும் பலி!

புகழ்பெற்ற டைட்டானிக் கப்பலைப் பார்வையிடுவதற்காக 5 பேருடன் ஆழ்கடலுக்குச் சென்று மாயமான டைட்டன் நீர்மூழ்கி வெடித்துச் சிதறிவிட்டதாக மீட்புக் குழுவினர் அறிவித்துள்ளனர். அதையடுத்து, அதிலிருந்த பாகிஸ்தானிய தொழிலதிபர், அவரது மகன் உள்ளிட்ட ஐவரும் உயிரிழந்தது உறுதியாகியுள்ளது.

டைட்டன் நீர்மூழ்கி மாயமான பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் பணியின்போது, அந்த நீர்மூழ்கியின் சிதறிய பாகங்கள் ரிமோட் நீர்மூழ்கிச் சாதனம் (ஆர்.ஓ.வி.) மூலம் கண்டறியப்பட்டுள்ளன. டைட்டானிக் கப்பல் உடைந்து கிடக்கும் பகுதிக்கு சுமார் 1,600 அடி தொலைவில் அந்த நீர்மூழ்கியின் பாகங்கள் கடல் படுகையில் சிதறிக் கிடக்கின்றன, என்று டைட்டன் நீர்மூழ்கியைத் தேடும் பணியில் ஈடுபட்ட அமெரிக்க கடலோர காவல் படைப் பிரிவு தளபதி ஜான் மாகர் தெரிவித்திருக்கிறார்.

கடலுக்குள் அழுத்தத்தைத் தாங்குவதற்கான டைட்டன் நீர்மூழ்கியின் பகுதி உள் வெடிப்புக்குள்ளானதில், அதிலிருந்த அனைவரும் உயிரிழந்தது உறுதியாகியுள்ளது. அவர்களது உடல்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெறும். டைட்டன் நீர்மூழ்கி எவ்வாறு வெடித்தது என்பதை அறிந்துகொள்வதற்காக அந்தப் பகுதியில் தேடுதல் பணிகள் தொடரும், என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனிலிருந்து அமெரிக்கா நோக்கி கடந்த 1912



ஆம் ஆண்டு சென்று கொண்டிருந்த டைட்டானிக் கப்பல், வழியில் பனிப்பாறையோடு மோதி கடலுக்குள் மூழ்கியதில் 1,500 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். கடலுக்குள் மூழ்கிய அந்தக் கப்பல், அமெரிக்காவின் நியூபௌண்ட்லாண்ட் தீவுக்கு 740 கி.மீ. தொலைவில் கடலடியில் உடைந்து கிடந்தமை கடந்த 1985 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது. அதன் பிறகு, அந்தக் கப்பலை கடல் ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள், திரைப்படத் துறையினர் போன்றவர்கள் ஆழ்கடலுக்குள் சென்று பார்வையிட்டு வந்தனர்.

இந்த நிலையில், டைட்டானிக் கப்பலைப் பார்வையிடுவதற்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்வதற்காக ஓஷன்கேட் எக்ஸ்பெடிஷன்ஸ் என்ற அமெரிக்க தனியார் நிறுவனம் நீர்மூழ்கி ஒன்றை வடிமைத்தது. டைட்டன் நீர்மூழ்கி என்று பெயரிடப்பட்ட அதில் அதிகபட்சமாக 5 பேர் வரை பயணிக்க முடியும். எனினும், அந்த நீர்மூழ்கியின் பாதுகாப்புத் தன்மை போதிய அளவுக்கு சோதிக்கப்படவில்லை என்று நிபுணர்கள் குற்றஞ்சாட்டி வந்தனர்.


இந்த நிலையில், எம்.வி. போலார் பிரின்ஸ் என்ற கப்பல் மூலம் டைட்டானிக் கப்பல் விழுந்துள்ள கடல் பகுதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை எடுத்துவரப்பட்ட டைட்டன் நீர்மூழ்கி, வியாழக்கிழமை காலை கடலுக்குள் இறக்கப்பட்டது.

அதில் பிரிட்டன் தொழிலதிபர் ஹமீஷ் ஹார்டிங், ஓஷன்கேட் நிறுவனத்தின் நிறுவனர் ஸ்டாக்டன் ரஷ், நீர்மூழ்கி மாலுமியும் பிரான்ஸ் கடற்படையின் முன்னாள் கமாண்டோவுமான போல்-ஹென்றி நார்கியோலே, பாகிஸ்தான் தொழிலதிபர் ஷேஸதா தாவூத், அவரது மகன் சுலைமான் தாவூத் ஆகிய 5 பேர் பயணித்தனர்.

சுமார் 4 கி.மீ. ஆழத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த நீர்மூழ்கிக்கும் போலார் பிரின்ஸ் கப்பலுக்கும் இடையே இருந்த தகவல் தொடர்பு சுமார் ஒரு மணித்தியாலம் 45 நிமிடங்களுக்குப் பிறகு துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில், 4 நாள்களாக நடைபெற்ற தேடுதல் பணிகளுக்குப் பிறகு அந்த நீர்மூழ்கி, கடலுக்குள் வெடித்துச் சிதறி, அதிலிருந்த ஐவரும் உயிரிழந்தமை தற்போது அறியப்பட்டுள்ளது.

## டெக்சாஸில் சக்திவாய்ந்த சுழல்காற்றடிப்பு நால்வர் பலி - பத்துக்கும் மேற்பட்டோர் காயம்



தெற்கு அமெரிக்க மாநிலமான டெக்சாஸில் சக்திவாய்ந்த டோனடோ எனப்படும் சுழற்காற்றுச் சூறாவளி தாக்கியதில் நால்வர் உயிரிழந்துள்ளதாகவும் பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சூறாவளித் தாக்கமானது, கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. இதனால், அங்கு வசிப்பவர்களின் குடியிருப்புகள் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

பலத்த காற்று மற்றும் மழை காரணமாக அமெரிக்காவின் மேலும் சில பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

## ரஷ்யாவில் வெடிமருந்து ஆலை விபத்தில் 5 தொழிலாளர்கள் பலி

நேட்டோவுடன் உக்ரைன் இணைய விரும்புவதை எதிர்த்து ரஷ்யா அதன் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. 15 மாதங்களுக்கும் மேலாக இந்தப் போர் நீடித்து வருகிறது. இதனால், இருநாட்டவர்களிலும் பலி எண்ணிக்கை உயர்ந்து கொண்டு வருகிறது.

இந்த நிலையில், ரஷ்யாவின் தென்மேற்கின் டம்போவ் பகுதியில் உள்ள கொட்டோவ்ஸ்க் நகரில் இயங்கிவரும் வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலையில் எதிர்பாராத விதமாக வெடி விபத்து நிகழ்ந்துள்ளது. இதனால், தொழிற்சாலைக் கட்டிடம் இடிந்து விழுந்து தரைமட்டமானது. கட்டிட இடிபாடுகளில் சிக்கிய 5 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். இது குறித்து விசாரணை நடப்பதாக அந்த நாட்டின் ராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் வெடிமருந்துகளை உக்ரைனுக்கு எதிரான போரில் அந்த நாட்டின் இராணுவம் பயன்படுத்தி வந்தது. இதனால் தொழிலாளர்கள் மும்முரமாக வெடிமருந்து தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுவந்த நிலையிலேயே இந்த வெடிவிபத்து நிகழ்ந்துள்ளது.

## ஹராரே விளையாட்டு மைதானப் பகுதியில் தீ விபத்து போட்டிகள் நடைபெறத் தடையில்லையென அறிவிப்பு



சிம்பாப்வேயில் ஐ.சி.சி. உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில், போட்டிகள் நடைபெறும் மைதானத்தில் ஒன்றான ஹராரே ஸ்போர்ட்ஸ் கழகத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மைதானத்தின் தெற்குப் பகுதியில் குறித்த தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், போட்டியைக் காண வந்த ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த போட்டியில் நெதர்லாந்துக்கு எதிராக சிம்பாப்வே 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, சிறிது நேரத்தில் குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்துக் குறித்து அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டதையடுத்து, தீயணைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனையடுத்து, அடுத்த போட்டிகளுக்கு குறித்த மைதானத்தைப் பயன்படுத்தலாமா? என்பது பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பழைய கட்டடமொன்றின் கூரையாகவிருந்த காய்ந்த புற்களே தீ வேகமாகப் பரவத் துணைபுரிந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தீயை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் துணை புரிந்த தீயணைப்புப் படையினருக்கு நன்றி தெரிவித்துள்ள சிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகம், போட்டிகள் திட்டமிட்டபடி அந்த மைதானத்திலும் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்துள்ளது.




## ஆய்வகத்தில் உருவாகும் செயற்கை இறைச்சி விற்பனைக்கு அமெரிக்க அரசாங்கம் அனுமதி!

உலகின் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப இறைச்சிக்கான தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனினும், இறைச்சிக்காக உயிரினங்களைக் கொல்வதை நிறுத்துமாறு பல அமைப்புகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், இழைய வளர்ப்பின் மூலம் இறைச்சியை உருவாக்கும் முயற்சிகள் தொடர்பான ஆய்வுகளும் தொடர்ந்தவண்ணமுள்ளன. சில மாதங்களுக்கு முன்னர் வெற்றிகரமாக அவ்வாறு இறைச்சி ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு உருவாக்கப்படும் செயற்கை இறைச்சிக்கு அனுமதி வழங்குமாறு அப்சைட் புட்ஸ், குட் மீற் ஆகிய இரண்டு நிறுவனங்கள் அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகத்திடம் விண்ணப்பித்திருந்தன. இந்த நிலையில், ஆய்வகத்தில் உருவாக்கப்படும் இறைச்சியை அமெரிக்காவில் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோழி, மாடு போன்றவற்றின் உயிரணுக்களில் இருந்து நேரடியாக ஆய்வகத்தில் வளர்க்கப்படும் இறைச்சியை நுகர்வோருக்கு வழங்க அனுமதியளிக்கும் இரண்டாவது நாடாக அமெரிக்கா பதிவாகியுள்ளது. ஏற்கனவே சிங்கப்பூரில் செயற்கைக் கோழி இறைச்சி விற்பனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் குட் மீற் நிறுவனத்திற்கு சொந்தமான ஈற் ஜஸ்ட் என்ற நிறுவனம், சிங்கப்பூரில் செற்கை இறைச்சியை விற்பனை செய்துவருகிறது. ஆய்வுகூடங்களில் வளர்க்கப்படும் இந்த வகை இறைச்சியானது வளர்ப்பு இறைச்சி என்று வகைப்படுத்தப்படுகிறது.

மாடு, கோழி போன்றவற்றின் செல்களைப் பிரித்தெடுத்து, அவற்றுடன் சில சத்துப்பொருட்களையும் கலந்து, ஆய்வகத்தில் செயற்கை இறைச்சி உருவாக்கப்படுகிறது.

அமெரிக்காவில் செயற்கை இறைச்சிக்கு ஒப்புதல் கிடைத்திருப்பது இறைச்சியை நமது உணவு மேசையில் சேர்க்கும் விதத்தை மாற்றும் எனவும், இது மிகவும் நிலையான எதிர்காலத்தை நோக்கிய ஒரு மாபெரும் படி எனவும் அப்சைட் புட்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# யாழ் இந்துவுக்கு இன்னிங்ஸ் வெற்றி



யாழ்ப்பாணம், ஜூன் 23

இலங்கை துடுப்பாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றின் நேற்றைய போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 15 வயதுப் பிரிவு பி அணி இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றது.

யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியுடன் இடம்பெற்ற இந்தப் போட்டியில், மகாஜனக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் கல்லூரி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 42 ஓட்டங்களையே பெற்றது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தனது முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்ற வேளை142/8 ஆட்டத்தை நிறுத்தி, மகாஜனக் கல்லூரியை மீண்டும் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த அந்த அணி 52 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழக்க, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பி அணி இன்னிங்ஸ் மற்றும் 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.06.2023இல் வெளியிடப்பெற்றது.